## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 12.9.2011

---

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

தமிழ் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்த பெருமக்களுக்கு பெருமை சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

1. சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.2.1860–ல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராக திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கிய போது தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டு கொளுத்தி விட்டு தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்கு தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்திற்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும் செயலாலும் அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர் வர்க்கத்திற்கு பாடுபட்ட உழைப்பாளர் சிந்தனைச் சிற்பி திரு சிங்காரவேலர் அவர்கள்.

2. சுயமரியாதைச் சுடரொளி திரு ஜீவரத்தினம் அவர்கள் 11.11.1911–ல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும் ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழமையை விடுத்து புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

   ஏழைத் தொழிலாளர்களுக்காக பாடுபட்ட ஓய்வறியாத் தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி திரு ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

   இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணி மண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. தமிழ் மொழியின் மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காக தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு சிதம்பரநாதன் அவர்கள், 5.1.1948–ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவிதாங்கூர்–கொச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த திரு சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த் மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 4.7.1954–ல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களை சந்திக்க மூணாறு சென்ற போது, திரு சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6.7.1954-ல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார். திரு சிதம்பரநான் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

பல தியாகங்களை செய்த மொழிப் போர் தியாகி திரு சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன். அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப் போர் தியாகி திரு சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

******